தமிழ்நாடுஉள்ளாட்சிஅமைப்புகள்முறைமன்றநடுவம்
எண்.100 அண்ணாசாலை, கிண்டி, சென்னை– 600 032.
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல்முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை:திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடுஉள்ளாட்சிஅமைப்புகள்முறைமன்றநடுவர்

ஆணை எண்.140/ந/2024

நாள்.22.11.2024

| | | |
|---|---|---|
| திருமதி.M.சுமதி,<br>சோளிங்கர் | – | முறையீட்டுமனுதாரர் |
| நகராட்சிஆணையாளர்,<br>சோளிங்கர் நகராட்சி, சோளிங்கர் | – | எதிர்மனுதாரர் |

இராணிப்பேட்டை மாவட்டம், சோளிங்கர், சன்னதிதெரு, கதவு எண். 18/52A என்கிற முகவரியில் வசிக்கும் திருமதி.M.சுமதி என்பவரின் 22.11.2023 நாளிட்டபுகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 22.11.2023 அன்று பெறப்பட்டு, 140/ந/2024 எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

இராணிப்பேட்டை மாவட்டம், சோளிங்கர், சன்னதி தெரு, கதவு எண்.18/52A என்கிற முகவரியில் வசிக்கும் திருமதி.M.சுமதி என்பவர் தமது 22.11.2023 நாளிட்ட மனுவில் கீழ்க்கண்டவாறு புகார் தெரிவித்துள்ளார்:

20.09.2013 அன்று சோளிங்கர் நகராட்சி அலுவலகத்தில் போலி ஆவணத்தின் மூலம் வீட்டுவரி K.வரலட்சுமி பெயரில் ஏற்படுத்திய (N) 6403 (old) 5644ஐ ரத்து செய்து கொடுக்கும்படியும், என் தாயார் எனக்கு எழுதிக்கொடுத்த பதிவு செய்யப்பட்ட உயிலின்படி புதியவீட்டு வரிவிதிப்பு சம்மந்தமாக மனு கொடுத்தேன். நகராட்சிவருவாய்துறைஆய்வாளர் திரு.ஜெயக்குமார் அவர்கள்கேட்டிருந்தஎல்லாஆவணங்களின் நகல்களைகொடுத்தேன். போலிஆவணத்தின் மூலம் என் தம்பிமனைவிவரலட்சுமிபெயரில்விதிக்கப்பட்டிருந்தசொத்துவரி (புதிய எண். 6403 (பழைய எண்.5644) ரத்து செய்ய தனியாக மனுகொடுத்தேன். மேலும் ராணிப்பேட்டை மாவட்டப்பதிவாளர் (நிர்வாகம்) அவர்களிடம் போலி ஆவணத்தை ரத்து செய்ய மனு

கொடுத்தேன். தீவிர விசாரணைக்குப்பின் வரலட்சுமி பெயரில் ஏற்படுத்திய ஆவணத்தை மாவட்டப்பதிவாளர் அவர்களின் ஆணை எண்.5296/அ/2021–ன்படி 1983/2013 ஆவணம் போலி ஆவணம் என முடிவு செய்து ஆணையிடப்படுகிறது. இதை வில்லங்க சான்றிதழிலும் பதிவு செய்யப்பட்டது. போலி ஆவணம் மூலமாக வரலட்சுமி பெயரில் வீட்டு வரிவிதிக்கப்பட்டதை ரத்து செய்திட மனு கொடுத்து 57 நாட்கள் ஆகியும் இதுவரையும் ரத்து செய்யவில்லை. ரத்து செய்யமாட்டேன் என்று சொல்கிறார்கள். மாவட்டப்பதிவாளர் (நிர்வாகம்) ஆணையை நான் செயல்படுத்தமாட்டேன் மற்றும் அதற்கும் எங்களுக்கும் சம்மந்தம் கிடையாது. சொத்துரிமை மாற்றுச்சட்டம் சென்னை உயர்நீதிமன்றவழக்கு தீர்ப்பு நகல்பிரிவு 41 போலி சொத்துரிமையாளர் உரிமைமாற்றம் செய்யப்படுதல். (30) சொத்துரிமை மாற்றம் செய்பவர் சொத்துரிமை மாற்றம் செய்வதற்கு அதிகாரமுடையவர் என்பதனை உறுதி செய்து கொள்வதற்கு சொத்துரிமை மாற்றம் பெறுபவர் சார்பதிவாளர் அலுவலகத்திலுள்ள பட்டியலை ஆய்வு செய்யவில்லை. அதனால் பிரிவு 41–ன்படி பயனை பெறுவதற்கு உரிமையற்றவர் ஆவார். என் தாயார் எனக்கு எழுதிக்கொடுத்த சார்பதிவகத்தில் பதிவு செய்யப்பட்ட உயிலின்படி என் தாயாருக்குப்பின் எனக்கு உரிமையாகிறது. அதன்படி என் பெயருக்கு புதிய வீட்டு வரி போட்டு கொடுக்கும்படி கேட்டும், தேவை இல்லாததை பேசிவருகிறார். மனு கொடுத்து 57 நாட்கள் ஆகியும் இதுவரையில் வீட்டுவரி போட்டு தரவில்லை. நகராட்சி வருவாய் ஆய்வாளர் திரு.ஜெயக்குமார் தமிழ்நாடு நகராட்சி நிர்வாக ஆணையத்துக்கு உட்பட்டு செயல்படாமல் பதவியில் இருப்பதால் இவர் தன்னிச்சையாக செயல்படுகிறார். ஆகவேதாங்கள்இவ்விசயத்தில்தலையிட்டுஎனக்குபுதியவீட்டுவரிபோட்டுகொடுக்கும்படிஆணை யிடும்படிகோரியுள்ளார்.

2. மனுதாரரின் புகார் மனு மீது விரிவான அறிக்கை கோரி இம்முறைமன்ற நடுவ 19.01.2024 நாளிட்ட கடிதம் மூலம் சோளிங்கர் நகராட்சி ஆணையாளர் கோரப்பட்டார்.

3. சோளிங்கர் நகராட்சி ஆணையாளர் தனது 08.10.2024 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தனது விளக்கத்தினை சமர்ப்பித்துள்ளார்.

சோளிங்கர் நகராட்சிக்கு எதிராக எம்.சுமதி என்பவரால் தொடரப்பட்ட சென்னை உயர்நீதிமன்ற வழக்கு எண். W.P. No.11998/2024 வழக்கிற்கு இந்நகராட்சி சார்பாக திரு.P.குருநாதன், Addl. Government Pleader , சென்னை உயர்நீதிமன்றம் அவர்கள்ஆஜராகி வழக்கினை ஏற்று நடத்ததக்க வக்காலத்து ஆணையாளர் கையொப்பமிட்டு 13.06.2024ம் தேதி வக்காலத்து பதியப்பட்டுள்ளது. மேலும் இவ்வழக்கு தொடர்பாக திரு.K.சொல்முத்தழகன், வழக்கறிஞர், இராணிப்பேட்டை அவர்கள் வழக்கு எண்.OS/0100037/2014 District Munsif Court, Sholinghur–ல் நிலுவையில் உள்ளதால் பெயர் மாற்றம் செய்ய ஆட்சேபனை தெரிவித்து கடிதம் அளித்துள்ளார். திருமதி.K.வரலட்சுமி வழக்கு எண்.OS/0100037/2014 District Munsif Court Sholinghur–ல் நிலுவையில் உள்ளதால் பெயர் மாற்றம் செய்ய ஆட்சேபனை தெரிவித்து கடிதம் அளித்துள்ளார். சோளிங்கர் நகராட்சி ஆணையாளர் அறிவிப்பு கடிதம் வாயிலாக திருமதி.எம்.சுமதி, சோளிங்கர் அவர்களுக்கு நீதிமன்றம் வழங்கும் உத்தரவின் அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தெரிவித்து அறிவிப்பு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டது. எனவே மனுதாரருக்கு சென்னை உயர்நீதிமன்றம் வழங்கும் உத்தரவின் அடிப்படையில் பெயர் மாற்றம் செய்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தெரிவித்துள்ளார்.

4. மனுதாரர் திருமதி.M.சுமதி அவர்களையும் மற்றும் எதிர்மனுதாரரான சோளிங்கர் நகராட்சி ஆணையர் ஆகியோரை 09.10.2024 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் நடைபெறவிருக்கும் விசாரணைக்கு வருகை தந்து விளக்கம் அளிக்குமாறு இம்முறைமன்ற நடுவ 19.09.2024 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் திருமதி.M.சுமதி 09.10.2024ம் தேதியில் இம்முறைமன்ற நடுவத்தின் விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

20.09.2013 அன்று சோளிங்கர் நகராட்சி அலுவலகத்தில் K.வரலட்சுமி என்பவர் பெயரில் போலி ஆவணத்தின் மூலம் வீட்டுவரி போடப்பட்டதை(N) 6403 (old) 5624–ஐ ரத்து செய்ய வேண்டும். எனது தாயார் எனக்கு எழுதிக்கொடுத்த பதிவு செய்யப்பட்ட உயிலின் படி புதியவீட்டுவரி விதிப்பு சம்மந்தமாகவும் மனு கொடுத்துள்ளேன். போலி ஆவணத்தின் மூலம் என் தம்பி மனைவி வரலட்சுமி பெயரில் விதிக்கப்பட்டிருந்த சொத்துவரியை ரத்து செய்ய மனு கொடுத்திருந்னே். மேலும் ராணிப்பேட்டை மாவட்டப்பதிவாளர் (நிர்வாகம்) அவர்களிடம் போலி ஆவணத்தை ரத்து செய்யமனு கொடுத்துள்ளேன். தீவிர விசாரணைக்குப் பின் வரலட்சுமி பெயரில் ஏற்படுத்திய ஆவணத்தை மாவட்டப்பதிவாளர் அவர்களின் ஆணை எண்.5296/அ/2021–ன்படி 1983/2013 ஆவணம் போலி ஆவணம் என முடிவுசெய்து ஆணையிடப்பட்டது. இதை வில்லங்க சான்றிதழிலிலும் பதிவு செய்யப்பட்டுள்ளது. போலி ஆவணம் மூலமாக வரலட்சுமி பெயரில் வீட்டுவரி விதிக்கப்பட்டதை ரத்து செய்திட வேண்டுகிறேன்.

- மேலும் எனது 20.09.2023 நாளிட்ட மனுவில் கூறப்பட்டுள்ள விவரங்களை மேல்வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறைமன்ற நடுவத்தை கேட்டுக்கொள்கிறேன்.
- இது விசயமாக திருமதி.M.சுமதி அவர்கள் சென்னை உயர்நீதிமன்றத்தில் நகராட்சி ஆணையாளர் மீது ரிட் பெடிசன் நெ.WP.11998/2024 வழக்கு தொடரப்பட்டு வழக்கு நிலுவையில் உள்ளது என்ற விவரம் தெரிவித்துள்ளார்.

6) சோளிங்கர் நகராட்சி ஆணையாளர் சார்பாக இளநிலை உதவியாளர் 09.10.2024 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தினை பதிவு செய்துள்ளார்.

சோளிங்கர் நகராட்சிக்கு எதிராக திருமதி.எம்.சுமதி என்பவரால் சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு எண் WP.No.11998/2024-ல் இந்நகராட்சி சார்பாக Addl.Government Pleader திரு.பி.குருநாதன் என்பவர் ஆஜராகி வழக்கினை ஏற்று நடத்த தக்க வக்காலத்தில் ஆணையாளர் கையொப்பமிட்டு 13.06.2024ம் தேதி வக்காலத்து பதியப்பட்டுள்ளது. மேலும் இது தொடர்பாக திருமதி. வரலட்சுமி அவர்கள் District Munsif Court Sholinghur–ல் தொடர்ந்த வழக்கு எண்.OS./0100037/2014, நிலுவையில் உள்ளதால் பெயர் மாற்றம் செய்ய ஆட்சேபனை தெரிவித்து கடிதம் அளித்துள்ளார். திருமதி.K.வரலட்சுமி, சோளிங்கர் அவர்கள் District Munsif Court, Sholinghur–ல் தொடரப்பட்ட வழக்கு நிலுவையில் உள்ளதால் நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என இம்முறைமன்ற நடுவத்தில் தெரிவித்துள்ளார்.

- வழக்குகளில் வழங்கப்படும் நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என இம்முறைமன்ற நடுவத்தில் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.
- மேலும் இன்று 09.10.2024 இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜராகி 08.10.2024 நாளிட்ட சோளிங்கர் நகராட்சி பொறியாளர்(ம) ஆணையாளர்(பொ) அவர்கள் அறிக்கையில் தெரிவித்துள்ள விவரங்களை மேல்வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறைமன்ற நடுவத்தை கேட்டுக்கொண்டுள்ளார்.

7) மனுதாரரின் புகார் மனு ஆவணங்கள் மற்றும் அவரது வாக்குமூலம், சோளிங்கர் நகராட்சி ஆணையரின் அறிக்கை, சோளிங்கர் நகராட்சி இளநிலை உதவியாளர் வாக்குமூலம் மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் ஆகிய அனைத்தும் இம்முறைமன்ற நடுவத்தினால் மிகவும் கவனத்துடன் பரிசீலிக்கப்பட்டு, கீழ்க்கண்டவாறு ஆணையிடப்படுகிறது.

மனுதாரரின் தனது புகார் மனுவில் சோளிங்கர் நகராட்சிக்குட்பட்ட புதிய புல எண்.1350/4 (ப.பு.எண்.10698/5–ல்) அமைந்துள்ள தனது தாயாரின் சொத்தினை திருமதி.M.சுமதி அவர்களின் பெயரில் உயில் பதிவு செய்யப்பட்டு தனது பெயருக்கு புதிய வீட்டு வரி வழங்குமாறும், மனுதாரரின் தம்பி மனைவி K.வரலட்சுமி என்பவர் பெயரில் போலி ஆவணங்கள் மூலம் நகராட்சியில் சொத்துவரி (புதிய எண்.6403 பழைய எண்5644) விதிக்கப்பட்டதை ரத்துச்செய்யவும் கோரியுள்ளார்.

சோளிங்கர் நகராட்சி இளநிலை உதவியாளர் தனது வாக்குமூலத்தில் சோளிங்கர் நகராட்சிக்கு எதிராக திருமதி.எம்.சுமதி என்பவரால் சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு எண் WP.No.11998/2024-ல் இந்நகராட்சி சார்பாக Addl.Government Pleader திரு.பி.குருநாதன் என்பவர் ஆஜராகி வழக்கினை ஏற்று நடத்ததக்க வக்காலத்தில் ஆணையாளர் கையொப்பமிட்டு 13.06.2024ம் தேதிவக்காலத்து பதியப்பட்டுள்ளது. மேலும் இது தொடர்பாக திருமதி. வரலட்சுமி அவர்கள் District Munsif Court Sholinghur–ல் தொடர்ந்த வழக்கு எண்.OS./0100037/2014, நிலுவையில் உள்ளதால் பெயர் மாற்றம் செய்ய ஆட்சேபனை தெரிவித்து கடிதம் அளித்துள்ளார். திருமதி.K.வரலட்சுமி, சோளிங்கர் அவர்கள் District Munsif Court, Sholinghur–ல் தொடரப்பட்ட வழக்கு நிலுவையில் உள்ளதால் நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என இம்முறைமன்ற நடுவத்தில் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம் 2014, பிரிவு 10(3)–ல் கீழ்கண்டவாறு குறிப்பிட்டுள்ளது.

The Ombudsman shall not, enquire into matters relating to:-

a) x xx

b) any matter in respect of which an enquiry has been ordered under the commission of inquiries Act 1952 or any matter pending before a court

c) x xx

எனவே, மனுதாரர் திருமதி.M.சுமதி அவர்களால் சோளிங்கர் நகராட்சிக்கு எதிராக மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு எண்.WP.No.11998/24 மற்றும் திருமதி.வரலட்சுமி அவர்களால் District Munsif Court. Sholinghur–ல் தொடர்ந்த வழக்குஎண்.OS/0100037/2014-ம் நிலுவையில் உள்ளதால், மனுதாரரின் மனு மீது

இம்முறைமன்றத்தால் நடவடிக்கை எடுக்க அவசியம் எழவில்லை என முடிவு செய்து அவ்வாறே இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2024ஆம் ஆண்டு, நவம்பர் திங்கள்22–ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடுஉள்ளாட்சிஅமைப்புகள்முறைமன்றநடுவர்

பெறுநர்

1) திருமதி.M.சுமதி,
18/52A.சன்னதிதெரு,
சோளிங்கர் – 631 1012.
இராணிப்பேட்டைமாவட்டம்

2) நகராட்சிஆணையாளர்,
சோளிங்கர் நகராட்சி,
சோளிங்கர்.
இராணிப்பேட்டைமாவட்டம்.

3) நகராட்சிநிர்வாகஇயக்குநர்,
நகராட்சிநிர்வாகஇயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜாஅண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை– 600 028.

4) ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சிநிர்வாகஇயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜாஅண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை– 600 028.

நகல்: மாண்புமிகுமுறைமன்றநடுவர் அவர்களின் தனிச் செயலர்

இ.கோ/உதிரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

28/11/24

சட்டஆலோசகர்/செயலாளர்(முகூபொ)